
PAPER - 16

**605 / 16**

தொடக்கநிலை 6

மாதிரி தேர்வுத்தாள் - A16



பெயர் : ______________________

வகுப்பு : ______________________

தேதி : ______________________

/ 90

GOOD JOB

பெற்றோர் கையொப்பம் : ______________________

**A1 வேற்றுமை**

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும்**

[Type here]

PAPER - 16

**சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் , அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q1. கர்ணன் __________ நாடி வருபவர்களுக்கு வேண்டிய பொருள்களை அளித்தான்.

(1) தனக்கு
(2) தன்னை
(3) தன்னிடமிருந்து
(4) தன்னால் ( )

Q2. பேராசிரியர் தம் மாணவ ____________ நிறையக் கட்டுரைகள் எழுதினார்.

(1) பருவத்திற்கு
(2) பருவத்தின்
(3) பருவத்தில்
(4) பருவத்தை ( )

Q3. அம்மா ______________ வேண்டிய பொருள்களை வாங்க சந்தைக்குச் சென்றார்.

(1) வீட்டை
(2) வீட்டுடன்
(3) வீட்டின்
(4) வீட்டுக்கு ( )

Q4. "________________! தேர்வுத்தாளைத் திருப்புங்கள்," என்றார் ஆசிரியர்.

(1) மாணவர்களே
(2) மாணவர்களை
(3) மாணவர்களுடன்
(4) மாணவர்களுக்கு (
)

Q5. கற்றல் பயணத்துக்குச் செல்லும் மாணவர்கள் ____________ பள்ளிப்பேருந்தில் ஏறினார்கள்.

(1) உற்சாகத்தால்
(2) உற்சாகத்திலிருந்து
(3) உற்சாகத்திற்கு
(4) உற்சாகத்துடன் ( )

**A2 செய்யுள் / பழமொழி**

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள் / பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு .**

[Type here]

**அதன் பின்னர் OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.**
**(10 மதிப்பெண்கள்)**

Q6. கெடுவான் கேடு _______________.

(1) செய்வான்
(2) புரிவான்
(3) நினைப்பான்
(4) எண்ணுவான் ( )

Q7. ஒரு கை தட்டினால் ____________ எழுப்புமா?

(1) சத்தம்
(2) ஓசை
(3) ஓசை
(4) ஒலி ( )

Q8. இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
_______________ வல்ல தரசு.

(1) வகுத்தலும்
(2) மிகுதலும்
(3) தொகுத்தலும்
(4) போற்றலும் ( )

Q9. விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலை காண்பு _________.

(1) அறிவு
(2) அரிது
(3) செறிவு
(4) மாண்பு ( )

Q10. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் ___________
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

(1) முன்னோர்
(2) அறிவோர்
(3) நூலோர்
(4) படித்தோர் ( )

<u>A3 அடைமொழி / எச்சம்</u>

**Q11 முதல் Q15 வரையுள்ள <u>அடைமொழி / எச்சத்தை</u> நிறைவு செய்வதற்கு ஏற்ற மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும்**

[Type here]

PAPER - 16

**சொற்களிலிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

Q11. முரளி வெளியூருக்குச் செல்லும் நாளை ஆவலுடன் ______________ காத்திருந்தான்.

(1) எதிர்பார்த்த
(2) எதிர்பார்க்கும்
(3) எதிர்பார்த்து
(4) எதிர்பார்க்க ( )

Q12. மக்கள் ஓவியன் வரைந்த படத்தைப் ___________ வியந்து நின்றனர்.

(1) பார்த்த
(2) பார்த்து
(3) பார்க்க
(4) பார்க்கும் ( )

Q13. ______________ இனத்தவர்களின் பாரம்பரிய விளையாட்டுக்கள் சிறுவர்களை வெகுவாக கவர்ந்தன.

(1) பலவகை
(2) பல்வேறு
(3) சிலவகை
(4) சிலவிதமான ( )

Q14. தச்சர் நாற்காலிகள் செய்ய ______________ மரக்கட்டைகளை வாங்கிச் சென்றனர்.

(1) உறுதியாக
(2) உறுதி
(3) உறுதியாய்
(4) உறுதியான ( )

Q15. நான் நட்டு வாய்த்த செடியில் மல்லிகை மலர்கள் ______________ மலர்ந்து மணம் பரப்பின.

(1) குவிந்து
(2) வளர்ந்து
(3) மலர்ந்து
(4) விழுந்து ( )

## A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்

**Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் , அந்த விடையின்**

[Type here]

More papers at www.testpapersfree.com

PAPER - 16

**எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)**

மனிதன் மனம் வைத்தால் எதையும் சாதிக்கலாம் என்பதற்கு வாரனே ஒரு சிறந்த உதாரணம். வாரனுக்கு மலை ஏறுவது **(Q16)** _______________ மிகவும் பிரியம். நேரங்கிடைக்கும் பொழுதெல்லாம் அவர் தன் தந்தையுடன் மலை ஏறுவார். ஆரம்பத்தில் மலை ஏறுவது அவருக்கு **(Q17)** _______________ இருந்தது. நாளடைவில் அதுவே அவருக்கு பொழுதுபோக்காகவும் ஆகிவிட்டது.

ஒருநாள் அவர் மலை ஏறும்போது தாரிக் கிழே விழுந்துவிட்டார். அவரின் கால்கள் ஒரு பாறையில் மாட்டிக்கொண்டன. **(Q18)** _______________ நடமாட்டம் இல்லாத இடமாக இருந்ததால் இரண்டு நாள்கள் வரை எந்தஒரு உதவியும் அவருக்கு கிடைக்கவில்லை. அதன்பிறகு மலையேறிகள் சிலர் அவரை **(Q19)** _______________ மருத்துவமனையில் சேர்த்தார்கள். விபத்தில் அவரின் கால்கள் துண்டிக்கப்பட்டன.

வார்னே உடல் ஊனத்தை பெரிதாக கருதவில்லை. குணமடைந்ததும் அவர் மீண்டும் மலை ஏறாத தொடங்கிவிட்டார். அவர் தாம் பெட்ரா **(Q20)** _______________ ஒரு புத்தகமாக வெளியிட்டார். சாதனை படைக்க உடல் ஊனம் ஒரு தடையல்ல என்பதை அவர் உலக மக்களுக்கு நிரூபித்துள்ளார்.

Q16.
(1) எனவே
(2) என்பது
(3) என்பதால்
(4) என்றால் ( )

Q17.
(1) துன்பமாக
(2) சிரமமாக
(3) பாரமாக
(4) விருப்பமாக ( )

Q18.
(1) விலங்குகள்
(2) காட்டுவாசிகள்
(3) மிருகங்கள்
(4) ஆள் ( )

[Type here]

Q19. (1) கண்டுபிடித்து
(2) தேடி
(3) விசாரித்து
(4) தேர்ந்தெடுத்து ( )

Q20. (1) ஆற்றலை
(2) தன்மையை
(3) திறனை
(4) அனுபவத்தை

**B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்**
**பின்வரும் பகுதியை கருத்தூன்றிப் படி.**

கற்பகம் தன் ஐந்து வயது மகன் தீபனை அழைத்துக்கொண்டு சிராங்கூன் சந்தைக்குச் சென்றார். அவர் மும்முரமாகக் காய்கறிகளைப் பேரம் பேசிக்கொண்டிருக்கும்போது தீபன் ஒவ்வொரு கடையாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். சற்று நேரம் சென்ற பிறகே அவன், தன் தாய்

[Type here]

More papers at www.testpapersfree.com

அங்கில்லை என்பதை உணர்ந்தான். அவன் பயந்து அழத்தொடங்கினான். அப்போது அந்த வழியாக வந்த வழியாக இளைஞர் ஒருவர், " யாரப்பா நீ! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். அதற்கு தீபன் " என் அம்மாவை நான் வழியில் தொலைத்துவிட்டேன்," என்று கூறி அழுதான். அதற்கு அவர், " பயப்படாதே! உன் அம்மாவிடம் அழைத்துச் செல்கிறேன். சரி, அவர் எப்படி இருப்பார் என்று சொல்," என்று கேட்டார். அதற்கு அப்பையன் " அவர் மிகவும் அழகாக இருப்பார்," என்று பதில் அளித்தான்.

இளைஞர் அந்த பையனை அழைத்துக்கொண்டு நடந்தார். வழியில் அழகிய இளம் பெண் ஒருவர் வந்துகொண்டு இருந்தார். உடனே இளைஞர் தீபனிடம் "இவர் உன் அம்மாவா?" என்று ஆவலுடன் கேட்டார். உடனே தீபன் தலையை அசைத்தவாறு, "இல்லை என் அம்மா மிகவும் அழகாக இருப்பார்," என்று கூறினான். இவ்வாறு இளைஞர் காட்டிய ஒவ்வொரு அழகிய பெண்ணையும் தன் அம்மா அல்ல என்று தீபன் கூறினான்

அப்போது ஒரு பெண் பதற்றத்துடன் ஓடி வந்தார். அவரைப் பார்த்த சிறுவன், "அதோ! என் அம்மா ! என் அம்மா கிடைத்துவிட்டார்!" என்று மகிழ்ச்சியுடன் உரக்க கூறினான். இளைஞர் அந்தப் பெண்ணை பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தார். அந்த பெண்ணின் முகத்தில் ஒரு நீண்ட தழும்பு இருந்தது. இளைஞர் தயக்கத்துடன் தீபனை பார்த்து, " நீ உன் அம்மா மிகவும் அழகானவர் என்றாயே? இவரா உன் அம்மா?" என்று கேட்டார். அதற்கு அந்த சுட்டிப் பையன் பெருமையாக, "ஆமாம். என் அம்மா எல்லாரிடமும் பாசத்துடனும் கனிவுடனும் நடந்துகொள்கிறார். அதனால் என் அம்மாதான் இந்த உலகத்திலேயே மிக அழகானவர்," என்று கூறியவாறு தாயின் கையை பிடித்துக்கொண்டு துள்ளிக் குதித்து நடந்தான். அகத்தின் அழகே உண்மையான அழகு என்று புரிய வைத்துச் சென்ற தீபனை இமைகொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார் அந்த இளைஞர்.

**Q21 முதல் Q24 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைத்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கு உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில் அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (8 மதிப்பெண்கள் )**

Q21. தீபன் எப்போது தொலைந்து போனான்?

(1) அவன் தன் அம்மாவுடன் சந்தைக்கு வந்தபோது

(2) அவனின் அம்மா காய்கறிக கடையைத் தேடித் சென்றபோது

[Type here]

(3) அவனின் அம்மா காய்கறிக் கடைக்காரரிடம் பேசியபோது

(4) அவன் ஒவ்வொரு கட்டியாக வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தபோது ( )

Q22. இளைஞருக்கு தீபனின் அம்மாவைக் கண்டுபிடிப்பது ஏன் ஒரு சவாலாக இருந்தது?

(1) தீபன் அழத்தொடங்கியதால்

(2) தீபன் கூறிய தகவல் போதாததால்

(3) அழகான பெண்ணைக் கண்டுபிடிப்பது சிரமம் என்பதால்

(4) தீபனின் தாய் தொலைந்துவிட்டதால் ( )

Q23. இளைஞர் தீபனின் அம்மாவைக் கண்டு அதிர்ச்சி அடையாக காரணம் என்ன?

(1) தீபனின் அம்மா எதிர்பாராமல் அங்கு வந்ததால்

(2) தீபனின் அம்மா அழகான தோற்றத்தோடு இருந்ததால்

(3) தாம் நினைத்ததுபோல தீபனின் அம்மா எழிலுடன் இல்லாததால்

(4) தீபனுக்கு அவன் அம்மாவைப் பற்றி நன்கு தெரிந்திருந்ததால் ( )

Q24. சிறுவன் அழகை எதனோடு சாப்பிடுகிறான்?

(1) இளமையான தோற்றத்தோடு

(2) மற்றவர் செய்யும் உதவியோடு

(3) ஓய்வில்லாத உழைப்போடு

(4) அன்பும் பரிவும் கொண்ட நெஞ்சத்தோடு ( )

<u>சொற்பொருள்</u>

**வினா Q25 இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (2 மதிப்பெண்கள்)**

Q25. மும்முரமாக

(1) பதற்றமாக
(2) தீவிரமாக
(3) கவனமாக
(4) வெறுப்பாக ( )



More papers at www.testpapersfree.com

PAPER - 16

C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்

பின்வரும் பகுதியில் **Q26** முதல் **Q29** வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான ஒலி வேறுபட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)

| | | |
|---|---|---|
| Q26. | | Q26 ( ) |

[Type here]

More papers at www.testpapersfree.com

PAPER - 16

| | | |
|---|---|---|
| Q27. | முத்துவும் அவன் அப்பாவும் சிங்கப்பூர் ஆற்றைப் பார்க்கச் சென்றார்கள். அவர்கள் உல்லாசப் படகில் ____________ அமர்ந்ததும் அது புறப்பட்டது. | Q27 ( ) |
| Q28. | இந்தியாவிலிருக்கும் அஜந்தா குகைகளில் ஓவியங்களும் சிற்பங்களும் செதுக்கப்பட்டுள்ளன. அவை சுற்றுப்பயணிகளைக் கவரும் ____________ கோயில்களாக விளங்குகின்றன. | Q28 ( ) |
| Q29. | என் அண்ணான் கடும் காய்ச்சலால் அவதிப்பட்டார். மருத்துவர் அவர் நோயின் ____________ அறிந்து தக்க மருந்து அளித்தார். | Q29 ( ) |
| | பெற்றோர் தம் பிள்ளைகளை வெஸ்ட்கோஸ்ட் பூங்காவுக்கு அழைத்துச் சென்றார்கள். பிள்ளைகள் ____________ புல்வெளியில் ஓடித் திரிந்த அழகைக் கண்டு அவர்கள் ரசித்தார்கள். | |

| | |
|---|---|
| (1) பரந்த | (5) பறந்த |
| (2) ஏறி | (6) ஏரி |
| (3) தண்மையை | (7) தன்மையை |
| (4) கலை | (8) களை |

**D7 கருத்து விளக்கப்படக் கருத்தறித்தல்**



[Type here]



More papers at www.testpapersfree.com

PAPER - 16

## கதை எழுதும் போட்டி

விலங்கு தோட்டத்தில் இருக்கும் ஏதேனும் ஒரு விலங்கைப்பற்றி சிறுவர்களுக்கு ஏற்ற கதையை எழுதிக் கவர்ச்சிமிக்க பரிசைப் பெறுங்கள்!!!

**<u>பரிசுகள்</u>**

**முதல் பரிசு:**
ரொக்கம் $800 மற்றும் விலங்கு தோட்டத்தின் முதல் வருட இலவச அனுமதி அட்டை மற்றும் பற்றுச்சீட்டு

**இரண்டாம் பரிசு:**
ரொக்கம் $500 மற்றும் விலங்கு தோட்டத்தின் ஒரு வருட இலவச அனுமதி அட்டை மற்றும் பற்றுச்சீட்டு.

**மூன்றாம் பரிசு:**
ரொக்கம் $300 மற்றும் விலங்கு தோட்டத்தின் ஒரு வருட இலவச அனுமதி அட்டை மற்றும் பற்றுச்சீட்டு

கவனிக்க வேண்டியவை

10 முதல் 12 வயது வரை உள்ள சிங்கப்பூரர்கள் மட்டுமே போட்டியில் கலந்து கொள்ளலாம்.

கதையைச் சிங்கப்பூர் விலங்கியல் தோட்டத்திற்கு 15 - ஜூன் 2017 மாலை 5 மணிக்குள் அஞ்சல் மூலம் அனுப்பிவைத்துவிட வேண்டும். தாமதமாக வருபவை போட்டியில் ஏற்றுக்கொள்ள படமாட்டாது.

**Q30 முதல் Q33 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாக கொண்டு அமைத்துள்ளன. ஒவ்வொரு தெரிவுவிடை வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன்**

[Type here]

More papers at www.testpapersfree.com

PAPER - 16

**எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. சுயவிடை வினாவிற்கு விளம்பரத்திலிருந்து விடையை கண்டறிந்து எழுது. (10 மதிப்பெண்கள்)**

Q30. கிழே கொடுக்கப்பட்டுள்ள தகவல்களுள் எது சரியானது?

(1) கதையை ஜூன் 5 ஆம் தேதிக்குள் அனுப்பி வைத்துவிடவேண்டும்

(2) உயர்நிலைப்பள்ளியில் படிக்கும் சிங்கப்பூர் மாணவர்கள் பங்கேற்கலாம்.

(3) ஒரே ஒரு கதையை அஞ்சல் வழி அனுப்பி வைக்கவேண்டும்.

(4) எழுத்தாளர்கள் பறவைகளைப் பற்றி எழுதவேண்டும் ( )

Q31. கவிதா என்ற மாணவி போட்டியில் கலந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போனால் எது காரணமாக இருக்கும்?

(1) கவிதா ஒரு சிங்கப்பூரர்

(2) கவிதா ஒரு மிருகத்தை பற்றிய கதையை அனுப்பியுள்ளார்

(3) கவிதா தொடக்கநிலை ஐந்தில் படிக்கிறான்

(4) கவிதாவுக்கு பதினான்கு வயது ( )

Q32. நீ ஒரு நடுவராக இருந்தால் எந்தக் கதையைக் தேர்ந்தெடுத்தாய்?

(1) கேலியும் நகைச்சுவையும் இணைத்து எழுதப்பட்ட கதை

(2) ஐநூறு சொற்களுக்கு மேல் எழுதப்பட்ட சுவராசியமான கதை

(3) ஆர்வம் தூண்டும் வகையில் விதிமுறைக்கு உட்பட்டு எழுதப்பட்ட கதை.

(4) அணைத்து வயதினரும் ரசிக்கும் வகையில் எழுதப்பட்ட கதை.

Q33. எதை எழுதும் போட்டியில் 3 - வது நிலையில் வருபவர் எவற்றைப் பெறுவார்?

(4 மதிப்பெண்கள்)

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

**D8 சுயவிடை கருத்தரித்தல்**

[Type here]

PAPER - 16

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்துன்றிப் படி.**

வேணியும் லதாவும் இணைபிரியாத பள்ளித்தோழிகள். அவர்கள் எப்போதும் ஒன்றாகவே பள்ளிக்குப் போய் வருவார்கள். லதா வேணிக்கு தெரியாத பாடங்களைச் சொல்லித் தருவாள். வேணியும் லதாவுக்கு என்ன உதவி தேவைப்பட்டாலும் அதை தயங்காமல் செய்வாள். ஆண்டுகள் பல கடந்தன. இருவரும் தன் மேற்படிப்பை முடித்தனர். லதாவின் தந்தை, தன் மகள் தன் வியாபாரத்தை எடுத்து நடத்தவேண்டும் என்று விரும்பினார். எனவே அதன் தொடர்பான படிப்பை படிக்க அவள் அயல்நாட்டுக்குச் சென்றாள்.

மூன்று ஆண்டுகள் படிப்பை முடித்த லதா, தாயகம் திரும்பினாள். அவளை வரவேற்க வேணி விமான நிலையத்திற்கும் வரவில்லை. அவளோடு தொடர்புகொள்ளவும் இல்லை. பலநாள் பார்க்காத தோழி இவ்வாறு நடந்து கொண்டதை எண்ணி லதா மனம் நொந்து போனாள். லதா தன் தந்தையின் வியாபாரத்தை எடுத்து மிகச் சிறப்பாக நடத்தினாள். வேணி ஒரு நிறுவனத்தில் கணக்காளராக வேலைக்குச் சேர்ந்தாள். பின் தன் அயராத உழைப்பால் விரைவில் அந்நிறுவனத்தின் மேலதிகாரியாக பதவியேற்றாள். வேணியும் லதாவும் பல ஆண்டுகள் ஒருவரையொருவர் பார்க்காமலேயே இருந்தார்கள்.

ஒரு நாள் வேணி வேலை முடிந்து தன் வாகனத்தில் வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்தாள். அப்போது அவள் தற்செயலாகத் தன் நீண்ட நாள் தோழி லதா ஒரு பேருந்து நிறுத்தத்தில் நிற்பதைக் கண்டாள். அவளுடைய எளிய தோற்றத்தைக் கண்ட வேணி குழப்பத்துடன் தன் வாகனத்தை அவள் அருகில் நிறுத்தினாள். வேலையை அங்கு எதிர்பார்க்காத லதா அதிர்ச்சியும் வெட்கமும் அடைந்தாள். நிலைமையை ஓரளவு ஊகித்துக்கொண்ட வேணி அதற்கான காரணத்தைக் கேட்டறிந்தாள்.

வியாபாரம் அதிக நஷ்டம் அடைந்திருப்பதாகவும், 5000 வெள்ளி இருந்தால் வியாபாரத்தை மீண்டும் தொடங்கி விடலாம் என்றும் வருத்தத்துடன் கூறினாள். வேணி சற்றும் யோசிக்காமல் தன் வாகனத்தை அருகிலிருந்த வங்கியின்முன் நிறுத்தி, தான் சேர்த்து வைத்திருந்த பணத்திலிருந்து லதா சொன்ன தொகையை எடுத்துத் தந்தாள். " இந்த பணத்தை கொண்டு உன் வியாபாரத்தை சிறப்பாக நடந்து," என்று கூறிய வேலையை கண்ணீர் மல்கக் கட்டியணைத்துக்கொண்டாள் லதா. அவர்களின் நட்பு மீண்டும் மலர்ந்தது.

[Type here]

PAPER - 16

**Q34 முதல் Q40 வரையுள்ள வினாக்களுக்கு மேற்கண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. ( 22 மதிப்பெண்கள் )**

Q34. வேணியும் லதாவும் உயிர்தோழிகள் என்பதை எப்படி அறிந்து கொள்ளலாம்?
(4 மதிப்பெண்கள்)

Q35. லதா எந்த நோக்கத்துக்காக வெளிநாடு சென்றாள்? (3 மதிப்பெண்கள்)

Q36. லதா, வேணியின் நடத்தையில் என்ன மாற்றத்தைக் கண்டாள்?
(2 மதிப்பெண்கள்)

[Type here]

More papers at www.testpapersfree.com

PAPER - 16

Q37. வேணி கடின உழைப்பாளி என்பதை எவ்வாறு தெரிந்து கொள்ளலாம்?
(3 மதிப்பெண்கள்)

Q38. "நிலைமையை ஓரளவு ஊகித்துக்கொண்ட வேணி, அதற்கான காரணத்தைக் கேட்டறிந்தாள்" என்ற வாக்கியத்தில் "நிலைமை" என்பது எதைக் குறிக்கிறது?
( 2 மதிப்பெண்கள்)

Q39. வேணி தன்னலமற்றவள் என்பதை எந்த செயல் உணர்த்துகிறது?
( 4 மதிப்பெண்கள்)

[Type here]

More papers at www.testpapersfree.com

PAPER - 16

Q40. உன்னை லதாவாக கற்பனை செய்துகொள். வேணியின் உயர்ந்த பண்பை எடுத்துக்காட்டும் செயல்களை சுட்டிக்காட்டுவதோடு, நன்றியும் தெரிவித்து அவளுக்கு சிறுகுறிப்பு ஒன்று எழுது. (4 மதிப்பெண்கள்)

அன்புள்ள வேணி,

இப்படிக்கு,
உன் அன்புத் தோழி.



More papers at www.testpapersfree.com

33) விலங்கியல் தோட்டத்தில் நடைபெறும் போட்டியில் கலந்துக் கொண்டு ஏதேனும் ஒரு விலங்கைப் பற்றி சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் கதை எழுதி 3-ஆம் பரிசு ~~பெற்றாள்~~ பெறுபவர் ரொக்கமாக $300 மற்றும் விலங்கு தோட்டத்தின் ஒரு வருட இலவச அனுமதி அட்டை மற்றும் பற்றுச்சீட்டு பெறுவர்.

இருவரும் ஒன்றாக பள்ளிக்குச் செல்வார்கள். மேலும்
34) வேணிக்கு தெரியாத பாடங்களை லதா சொல்லி தருவதன் மூலமும் லதாவுக்கு தேவைப்பட்ட உதவிகளை வேணி தயங்காமல் செய்ததன் மூலமும் இருவரும் உயிர்தோழிகள் என்பதை அறிந்து கொள்ளலாம்.

35) லதா, தன் தந்தையின் விருப்படி அவர் வியாபாரத்தை எடுத்து ~~நடு~~ நடத்த, அதன் தொடர்பான படிப்பை படிக்கும் நோக்கத்திற்காக வெளிநாடு சென்றாள்.

36) வேணி மூன்று ஆண்டுகள் கழித்து தாயகம் திரும்பும் தோழி லதாவை வரவேற்க விமானநிலையம் செல்லவில்லை.

More papers at www.testpapersfree.com

37) வேணி ஒரு நிறுவனத்தில் கணக்காளராக வேலை செய்து, பின் தனது அயராத உழைப்பால் விரைவில் அந்நிறுவனத்தின் மேலதிகாரியாக உயர்ந்தாள். இதிலிருந்து வேணி கடின உழைப்பாளி என்பதை தெரிந்து கொள்ளலாம்.

38) லதாவுக்கு ஏதோ பண பிரச்சனை என்பதை வேணி புரிந்துக்கொண்டாள். இதையே "நிலைமையை ஓரளவு ஊகித்துக் கொண்ட வேணி, அதற்கான காரணத்தைக் கேட்டறிந்தாள்" என்ற வாக்கியத்தில் "நிலைமை" என்ற சொல்லைக் குறிக்கிறது.

39) வியாபார நஷ்டத்தை சரி செய்ய $5000 வெள்ளி தேவை என லதா கூறிய உடன் சற்றும் யோசிக்காமல் வாகனத்தை வாங்கிமுன் நிறுத்தி தான் சேர்த்து வைத்த பணத்திலிருந்து லதா கேட்ட தொகையை கொடுத்து, வியாபாரத்தை சிறப்பாக நடத்து என வேணி கூறினாள். அவளின் இந்த செயலே அவள் தன்னலமற்றவள் என்பதை உணர்த்துகிறது.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com

40) நாம் பள்ளி தோழிகளாக இருந்த போதும் நீ தயங்காமல் எனக்கு தேவைப்படும் உதவிகளை செய்தாய். இன்று நாம் பெரியவர்கள் ஆன போதும் நட்பை மறக்காமல் என்னை பார்த்த பொழுது என் நிலைமையை உணர்ந்து கொண்டு அதற்கான பணத்தை சற்றும் யோசிக்காமல் உன் சேமிப்பில் இருந்து எடுத்துக் கொடுத்து வியாபாரம் சிறப்பாக செய்ய வாழ்த்தினாய். அன்றும் இன்றும் நீ சிறந்த தோழியாக உள்ளாய். உன் உதவிக்கும், நட்பிற்கும் என மனமார்ந்த நன்றிகள்.

More papers at www.testpapersfree.com

More papers at www.testpapersfree.com